தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 3, சித்ரபானு-திருவள்ளுவர் ஆண்டு 2033
2002 ஏப்ரல் 16, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு”.

பொது நல நோக்குடன் வாழ்கின்ற பேரறிவாளரின் செல்வமானது ஊர் மக்கள் அனைவருக்கும் பயன் தரும் நீர் நிறைந்த ஊருணியைப் போன்றதாகும்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்

(அ) ஒரு கட்சி உறுப்பினர்கள் கறுப்பு உடையில் அவைக்கு வந்துள்ளது

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் கறுப்பு உடையிலே வந்திருக்கிறார்கள். முக்கியமானதொரு தீர்மானத்தை நாம் கொண்டு வருகிற இந்தவேளையில் நாட்டு நலன் முக்கியமேயொழிய, இப்படிப்பட்ட ஒரு கறுப்புச் சட்டையை அணிந்து வந்து, இவர்கள் இதற்கு ஒரு களங்கம் கற்பிக்க முயல்வது நியாயமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்களுடைய கருத்தைத் தெரிவிக்க கறுப்பைப் பயன்படுத்துகிறார்கள்.